**சௌராஷ்ட்ர மேல்நிலைப்பள்ளி பரமக்குடி**
**பொருளியல் 12 ஆம் வகுப்பு**
**ஆசிரியர். திரு. K.S.சந்திரசேகரன், M.A.BEd., முதுகலை பொருளியல் ஆசிரியர்.**

## பாடம் 1.பேரியல் பொருளாதாரம்.

## இரண்டு மதிப்பெண்கள் வினா விடை

**1.பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.**

பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த தேசியவருவாய் வேலைவாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கியது. இது **வருவாய்க்கோட்பாடு** என அழைக்கப்படுகிறது.

**2.பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.**

பணவீக்கம் என்பது பணத்தின் மதிப்பு குறைவதும் பொருட்களின் விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

**3.பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?**

பொருளாதார அமைப்பு என்ற கருத்தினை திரு ஏ.ஜெ.பிரவுன் என்பவர் மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக்கொள்ளும் முறையை குறிப்பது என வறையறுத்துள்ளார்.

**4.வளர்ச்சிநிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**

வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.

**5.முதலாளித்துவம் என்றால் என்ன?**

பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும் சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். முதலாளித்துவ நாடு உம்: அமெரிக்கா

**6.பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக்.**

மாதிரி என்பது உண்மையான சூழலை விளக்குவது பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது கணிதம், வரைபடம், சமன்பாடு போன்ற பொருளாதார மாறிலிகளின் உறவை எளிய முறையில் விளக்குகின்றது.

**7.வருமான வட்ட ஓட்டம் என்பதை வரையறு.**

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள உறவினை மற்றும் தொடர்பினை விளக்குவதாகும் வட்ட ஓட்டம் கீழ் வருமாறு.
நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம், நாட்டு வருவாய், பொருட்கள், பணிகள்

## மூன்று மதிப்பெண்கள் வினாவிடை

**1.பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக.**

1.பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த செயல்பாடுகளை புரிந்து கொள்ளவும் தீர்வு காணவும் உதவுகிறது.
2.எதிர்கால பிரச்சனைகளை புரிந்துகொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள உதவுகிறது.
3.நடப்பு பிரச்சனைகளை அறிவியல் பூர்வமாக தீர்வு காணவும் மேலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும் உதவுகிறது.

**2.பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.**

பொருளாதார அமைப்பு மூன்று முக்கிய வகைகளை கொண்டுள்ளது
1.:முதலாளித்துவ பொருளாதார அமைப்பு (முதலாளித்துவம்)
2.சமத்துவ பொருளாதார அமைப்பு (சமத்துவம்) மற்றும்
3.கலப்பு பொருளாதார அமைப்பு (கலப்புத்துவம்)

www.Padasalai.Net

**3.முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக. ( ஏதேனும் நான்கு )**

**1.தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரை சட்டம்:** முதலாளித்துவத்தில் அனைத்து வளங்களும் தனி நபர்களுக்கு சொந்தமாக இருக்கும் இறப்பிற்கு பின் வாரிசுக்கு மாற்றப்படும்.

**2.தேர்வு செய்வதில் சுதந்திரம்** தனி நபர் பொருளை உற்பத்தி செய்யவும் இடத்தை தெரிவு செய்வதில் சுதந்திரம் பெற்றிருப்பர்.

**3.இலாப நோக்கம்** உற்பத்தியாளர் உச்ச இலாபம் அடைவதில் முழு நோக்கமாக இருப்பர்

**4.போட்டியில் சுதந்திரம் :** லாப நோக்கில் உற்பத்தி அமைவதால் சந்தையிதல் அதிக சுதந்திரம் காணப்படும்

**5.விலை இயங்கும் முறை** விலை இயங்கும் முறை முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இதயமாகும்

**6.அரசின் பங்கு** அடிப்படை பிரச்சனை கவனிப்பதில் அரசின் பங்கு பொருளாதாரத்தில் குறைவு.

**7.வருமான ஏற்றத்தாழ்வு :** ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு ஏற்படும்.

**4.சமத்துவத்தின் குறைகளை கூறுக.**

**1.சிவப்பு நாடா நிலை :** அனைத்து அதிகாரங்களும் அரசாங்கத்திடம் இருப்பதால் அரசாங்க நடவடிக்கைகள் நடைபெறுவதில் கால தாமதம் அமைய காரணமாகும்

**2.ஊக்கமின்மை :** திறமைக்கு எந்த ஊக்கமும் அளிக்க வாய்ப்பில்லை.

**3.தெரிவு செய்வதில் சுதந்திரக் குறைவு:** பண்டங்கள் மற்றும் பணிகள் தேர்வு செய்வதில் சுதந்திரம் கிடையாது.

**5.கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகள் (அ) பண்புகள் யாவை?**

1.உற்பத்தி சாதனங்களின் உரிமம தனியார் மற்றும் பொதுத்துறைக்கு சொந்தமாக இருக்கும்
2.பொதுத்துறை மறறும் தனியார் துறைகள் இணைந்திருக்கும்
3.பொருளாதார திட்டமிடலில் நோக்கங்கள் இலக்குகள் அடிப்படையில் இயங்கும்
4.பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வு அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.
5.சுதந்திரமும் கட்டுப்பாடும் இருந்தாலும் ஒட்டுமொத்த கட்டுப்பாடும் அரசிடம் காணப்படும்

**6.முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் வேறுபடுத்துக.**

| வ.எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|---|
| 1 | உற்பத்திமூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் |
| 3 | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை |

**7.இருதுறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.**

**1.இல்லத்துறை :** இது உற்பத்தி காரணிகளை அளிப்பதன் மூலம் வருவாயை பெறுகிறது. இத்துறை அதன் அனைத்து பொருட்கள் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்துகிறது

**2.நிறுவனத்துறை :** இது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது இல்லத்துறைக்கு சொந்தமான உற்பத்தி காரணிகளை பணியமர்த்துகிறது. Y= C+I

## பாடம் 2.தேசிய வருவாய்

### இரண்டு மதிப்பெண்கள் வினா விடை

**1.தேசிய வருவாய் இலக்கணம் தருக.**

தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும் (அல்லது) ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து இயற்கை வளங்களை பயன்படுத்திப பண்டங்கள் மற்றும் பணிகளை உருவாக்கும் நிகர ஆண்டு வருமானம் அல்லது தேசிய ஈவு தொகை தேசிய வருவாய் ஆகும்.

**2.GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.**

மொத்த தேசிய உற்பத்தி என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பு ஆகும் இதனுடன் நிகர ஏற்றுமதி வருமானமும் சேர்க்கப்பட வேணடும் (அல்லது) GNP = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.

**3.NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?**

NNP = GNP ___ தேய்மானக்கழிவு
NNP காரணி செலவில் = NNP சந்தை விலையில் - மறைமுக வரி + மானியம்
NDP = GDP - தேய்மானம்

**4. GNP க்கும் NNP க்கும் உள்ள தொடர்பினை எழுதுக.**

GNP = C+I+G+(X-M) + (R-P)

NNP=GNP - தேய்மானக்கழிவு

NNP காரணி செலவில் = NNP சந்தைவிலையில் - மறைமுக வரி + மானியம்

**5. தனிநபர் வருமானம் என்றால் என்ன ?**

தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனிநபருக்கும் பலவழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆகும்.

**6. GDP குறைப்பான் இலக்கணம் தருக.**

GDP குறைப்பான் என்பது GDP-ல் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலைமாற்றக்குறியீட்டு எண் ஆகும். **GDP குறைப்பான் = பணமதிப்பு GDP / உண்மை மதிப்பு GDP x 100**

**7. தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுயநுகர்வு" எவ்வாறு சிரமத்தை தருகிறது ?**

விவசாயிகள் தங்களின் சுயநுகர்வுக்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**மூன்று மதிப்பெண்கள் வினாவிடை.**

**1.தலைவீத வருமானம் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

(1) தலைவீத வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

(2) தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்க கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

(3) தலா வருமானம் = தேசிய வருமானம் / மக்கள் தொகை

**2. தனி நபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

| | தனி நபர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|---|
| 1. | ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் | தனி நபர் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. |
| 2. | தனி நபர் வருமானம் = தேசிய வருமானம் - (சமூக பாதுகாப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் லாபம்) + மாற்றுச் செலுத்தல்கள் | செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் - நேர்முக வரிகள் |

**3.காரணி செலவில் NNP - குறிப்பு தருக**

NNP – என்பது உற்பத்தி சந்தையின் மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமானச் செலுத்துதல் ஆகும்.

காரணி செலவில் NNP = சந்தைவிலையில் NNP — மறைமுக வரி + மானியம்

**4.செலவு முறைப்பற்றி குறிப்பு தருக.**

ஒரு ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

GNP = C+I+G+(X-M) C = தனியார் நுகர்வு செலவு, I = தனியார் முதலீட்டு செலவு G + அரசின் கொள்முதல் செலவு X - M = நிகர ஏற்றுமதி

**5.தேசிய வருவாய் கணக்கிடுதலில் இருமுறை கணக்கீட்டுப்பிரச்சனைக்கு என்ன தீர்வு**

ஒரு பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இருக்கிறது. உ.ம். ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே பஞ்சு, நூல், துணி ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பனை " பலமுறை கணக்கில் சேர்த்தல்.

www.Padasalai.Net

**6.தேசிய வருவாய் மற்றும பொதுநலன் ஆகியவற்றை பற்றி சுருக்கமாக எழுதுக.**

ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் தேசிய வருவாயைப் பொறுத்தே அமைகிறது.

GDP யில் தலைவீத வருமானம் மற்றும் அதன் ஆண்டு வளர்ச்சி அடிப்படையில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

அதிக தலைவீத வருமானம் உடைய நா டுநல்ல வாழக்கைத்தரத்துடன அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

1.நுகர்வு பொருட்களை காட்டிலும் மூலதன பொருட்கள் அதிகமாக இருந்தால் பொருளாதார நலனின் முன்னேற்றம் குறைவாக இருக்கும்.
2.இயற்கை வளங்களை மாசுபடுத்தினால் பொருளாதார நலன் குறையும்.
3.இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதால் பொருளாதார நலன் குறையும்.
4.பெண்களுக்கு வேலைவாய்ப்பு உழைப்பாளர்கள் அதிக நேரம் வேலை செய்ய வைப்பது பொருளாதார நலன் பாதிக்க வாய்ப்பு உள்ளது.

**7.தேசிய வருவாயின் பயன்களை பட்டியலிடுக.**

1.நாட்டு வருமானம் பொருளாதார நிலையை அளவிடவும் நாட்டின் பொருளாதார செயல்பாடுகளை கணக்கிட பயன்படுகிறது.
2.ஒவ்வொரு ஆண்டும் நாட்டின் வளர்ச்சி நிலையை அறிய உதவுகின்றது
3. பொருளாதார உற்பத்தி அமைப்பு முறை துறைவாரியான வளர்ச்சியை மற்றும் முன்னேற்றத்தின் எதிர்கால போக்கை அறிந்துகொள்ள பயன்படுகிறது.
4.வளர்ச்சி வீதத்தை அதிகரிக்க தேவையான பொருளாதார திட்டங்கள் மற்றும் கொள்கைகள் வகுக்க அரசுக்கு உதவுகின்றது.
5.முன்னேற்ற இலக்குகளை நிர்ணயிக்க உதவுகின்றது.
6.பண்டங்களின் எதிர்கால தேவையை முன்கூட்டியே தெரிந்து உற்பத்தி செய்ய நிறுவனங்களுக்கு உதவுகின்றது.
7.மக்களின் வாழக்கைத்தரத்தை மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு பார்க்க பயன்படுகிறது.
8.உற்பத்தி வாணிபம் நுகர்வு கொள்கை போன்றவற்றை உருவாக்க பயன்படுகிறது.

## பாடம் 3. வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

### இரண்டு மதிப்பெண்கள் வினா விடை

**1."முழு வேலைவாய்ப்பு" வரையறு.**

கீன்ஸின் கூற்றுப்படி முழு வேலை நிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பது ஆகும். நிலவுகின்ற கூலி விகித்தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறது எனில் அது முழு வேலைவாய்ப்பு என்கிறோம்.

**2. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?**

இந்திய கிராமப்புறங்களில் வேலையின்மையும் குறைவான வேலைவாய்ப்பும் காணப்படுகின்றன. கிராமங்களில் மறைமுக வேரையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது.

**3.உடன்பாடில்லா வேலையின்மை பற்றி சிறுகுறிப்பு வரைக.**

1.உழைப்பாளர்கள் தேவை மற்றும் அளிப்பில் சமைநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேரையின்மை ஏற்படுகிறது.
2.உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருள்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா வேலையின்மை ஏற்படுகிறது.

**4.தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தை தருக.**

இயந்திரமாதல் புதியன கண்டுபிடித்தலும் விரைவான உற்பத்திக்கு வழிவகுத்தல் புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால் குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**5.சே விதியின் எடுகோள்களை பட்டியலிடுக.**

1.தனிநபர் பொருளின் விலையை மாற்ற முடியாது. 2.முழு வேலைநிலவும் 3.உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவு போட்டி நிலவும் 4.கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு 5.இது நீண்ட கால பகுத்தாய்வை அடிப்படையாகக் கொண்டது.

**6.விளைவுத் தேவை என்றால் என்ன?**

விளைவுத் தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். விளைவுத் தேவை தேசிய வருவாய்க்கு சமமாக இருக்கும். விளைவுத் தேவை அதிகரிக்கும் போது வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.

**7.தொகு அளிப்பின் கூறுகள் யாவை?**

1.மொத்த நுகர்வு செலவு (C) 2.மொத்த தனியார் சேமிப்பு (S) 3.நிகர வரி வசூல் (T) 4.தனிநபர் வெளிநாட்டவர்க்கு கொடுக்கின்ற மாற்று செலுததல்கள் மற்றும் உதவித்தொகை இது (Rf)

மொத்த அளிப்பு = C+S+T=Rf.

**மூன்று மதிப்பெண்கள் வினாவிடை.**

**1.கீழ் வருவனவற்றை சுருக்கமாக எழுதுக.**

**1.பருவகால வேலையின்மை2. உடன்பாடில்லா வேலையின்மை 3.படித்தவர் வேலையின்மை**

**1.பருவகால வேலையின்மை:** ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர் எ.கா.கரும்பு பருத்தி குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும்

**2. உடன்பாடில்லா வேலையின்மை :** உழைப்பாளர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயராமை திறமை பற்றாக்குறை இயந்திரங்களில் பழுது ஏற்படுதல் மூலப்பொருள்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா வேலையின்மை ஏற்படுகிறது.

**3.படித்தவர் வேலையின்மை :** சில நேரங்களில் படித்து கல்வித்தகுதி பெற்றவர்களுக்கு வேலைகிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர் இத்தகைய வேலையின்மை படித்தவர் வேலையின்னை அல்லது கற்றோர் வேலையின்மை என்று பெயர்.

**2.தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டின் படி கூலிக் குறைப்பு எவ்வாறு வேலையின்மைப் பிரச்சனைக்குத் தீர்வாக அமைந்தது என்பதை வரைபடம் மூலம் விளக்குக.**

பொருளியல் அறிஞரான திரு.பிகு பொருட்களின் விலைமட்டம் குறைவதன் தொடர்பாக கூலி குறைகின்ற பொழுது தொழிலாளர்களின் கையிருப்பு பணத்தின் மதிப்பு கூடுவதால் மொத்த விளைவுள்ள தேவை கூடுமென்று கருதுகிறார்.

கூலி குறைவதால் விலை வீழ்ச்சியால் மக்கள் கையிலிருக்கும் உண்மை பணமதிப்பு கூடுவதால் நுகர்வும் கூடுகிறது. இதனால் முழு நிறை வேலைவாய்ப்பு நிலையை அடைய இதனை பிகுவின் விளைவு என்கிறோம் **N=QY/W** **N**=தொழிலாளர் எண்ணிக்கை **Y** =நாட்டு வருமானம் **Q** = கூலியாக செலுத்தும் பணம் **W**=கூலி வரைபடத்தில் கூலி குறையும் போது வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது.

**வரைபடம் :**

**3.ஜே.பி.சே விதியின் விளைவுகள் பற்றி குறிப்பு வரைக.**

1.அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை

2.உற்பத்திக்காரணிகள் அதன் உற்பத்தித் திறனுக்கு இணையாகும் வரை ஏற்றுக்கொள்ளும். 3.அரசின் தலையீடு இருக்காது. 4.வட்டி வீத நெகிழ்வுத்தன்மை சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும் பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும் பணத்தை கையில் வைத்திருக்கமாட்டார்கள்

**4.கீன்ஸின் கோட்பாட்டை தொடர் வரைபடம் மூலம் விளக்குக.**

**கீன்ஸ் கோட்பாட்டை விளக்கும் தொடர் வரைபடம்:**

www.Padasalai.Net

**5.தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளை கூறுக.**

கீன்ஸ் கோட்பாட்டின் படி ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவை தான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைவிற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே தொகு தேவை அல்லது மொத்ததேவை எனப்படும். **AD = C+I+G+(X - M)** C நுகர்வு தேவை I முதலீடு தேவை G அரசுசெலவு (X - M) என்பது நிகர ஏற்றுமதி

**6.தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.**

**விளக்கம் :** ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகுமதிப்பே தொகு அளிப்பு எனப்படும்.

**வரைபட விளக்கம்** :வரைபடத்தில் வேலைவாய்ப்பும் **OY** ல் எதிர்பார்க்கும் வருமானம். **Z** நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் உள்ள நிலையிலும் **Z1** வளைகோடு வேலைவாய்ப்பை பொறுத்து பணக்கூலி மாறும் நிலையில் உள்ளதையும் கூறுகிறது. **ONf** அளவில் பொருளாதார முழு வேலை நிலையை அடைகிறது.

**7.தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக.**

| வ.எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகியகாலச் சமநிலை | நீண்டகாலச் சமநிலை |
| 2. | சேமிப்பு குறைவு | சேமிப்பு அதிகம் |
| 3. | பேரியல் அணுகுமுறை | நுண்ணியல் அணுகுமுறை |
| 4. | அரசின் தலையீடு உண்டு | தலையீடாக்கொள்கை வலியுறுத்தப்படுகிறது. |
| 5. | வட்டி ரொக்கஇருப்பை விட்டுக்கொடுபதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |

## பாடம் 4 நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்

**இரண்டு மதிப்பெண்கள் வினாவிடை**

**1.நுகர்வுச் சார்பு என்றால் என்ன?**

வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே நுகர்வுச் சார்பு என்கிறோம்.
C = f(Y) C நுகர்வு Y வருமானம் f சார்பு

**2. " நுகர்வு நாட்டம்" என்றால் என்ன?**

பல்வேறு வருமான நிலைகளில் நுகர்விற்காக செலவிடப்பட்ட வருமானம் நுகர்ச்சி நாட்டம் எனப்படும்.

**3.சராசரி நுகர்வு நாட்டம் (APC ) வரையறு.**

வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டம் ஆகும் **APC = C/Y**

**4.இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) வரையறு.**

வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் இடையிலான விகிதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம ஆகும்.
**MPC= C / Y**

**5.சேமிப்பு நாட்டம் என்றால் என்ன?**

வருமானத்திற்கும் சேமிப்புக்கும் இடையே உள்ள தொடர்பே சேமிப்பு நாட்டம் எனப்படும் **S/Y**

**6.சராசரி சேமிப்பு நாட்டம் APS வரையறு.**

வருமானத்திற்கும் சேமிப்பிற்கும் இடையேயான விகிதமே சராசரி சேமிப்பு நாட்டம் எனப்படும் **APS = S/Y**

**7.இறுதி நிலை சேமிப்பு நாட்டம் MPS வரையறு.**

வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டம் ஆகும். **MPS = S / Y**

**8.பெருக்கி வரையறு.**

தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். **K= Y / I**

www.Padasalai.Net

**9.முடுக்கி வரையறு.**

கே.கே.குரிஹாரா முடுக்கி என்பது. ”தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வு செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்” முடுக்கி எனப்படும்.

**மூன்று மதிப்பெண் வினாவிடை.**

**1.கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துக்களைக் கூறுக.**

கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதி மூன்று கருத்துக்களை உள்ளடக்கியது. 2.அதிகரித்த வருமானம் நுகர்வு செலவிற்கும் சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது. 3.அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பு இரண்டையும் அதிகரிக்கச் செய்யும்.

**2.தன்னீச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.**

| | **தன்னீச்சையான முதலீடு** | **தூண்டப்படுகிற முதலீடு** |
|---|---|---|
| 1 | தன்னீச்சையானது | திட்டமிடப்பட்டது |
| 2 | வருவாயைப் பொறுத்து நெகிழாது | வருவாயைப் பொறுத்து நெகிழும் |
| 3. | நல நோக்கமுடையது | இலாபநோக்கமுடையது |
| 4 | பொருளாதார மந்த காலத்தில் அரசால் மேற்கொள்வது | பொருளாதார வளர்ச்சிக் காலத்தில் தனியாரால் மேற்கொள்வது |

**3.நுகர்வுச் சார்பை பாதிக்கிற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.**

**அகவயக்காரணிகள் :**

**முன்னெச்சரிக்கை நோக்கம் :** எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்ள கையில் ரொக்கம் வைத்திருப்பது

**எதிர்பார்க்கும் நோக்கம் :** எதிர்கால தேவைக்கான விருப்பம்

**வாணிப நோக்கம் :**வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான விருப்பம்

**புறவய காரணிகள் :**

**வருமான பகிர்வு :** செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே பெரிய வேறுபாடு இருந்தால் நுகர்வு குறைவாக இருக்கும்.

**விலை அளவு :** நுகர்வு சார்பை மிக முக்கியமான தீர்மானிக்கின்ற காரணியாக இருப்பது விலை அளவே ஆகும்.

**வட்டி விகிதம் :** வட்டி விகிதமும் நுகர்வு சார்பை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாகும்.

**4.முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.**

| **வ.எண்** | **முடுக்கி** | **பெருக்கி** |
|---|---|---|
| 1. | தூண்டப்பெற்ற முதலீடு மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதம் | வருமான மாற்றத்திற்கும் முதலீட்டின் மாற்றத்திற்கும் உள்ள விகிதம் |
| 2. | நுகர்வுத் தேவையின் அதிகரிப்பு முதலீட்டை அதிகரிக்கிறது. | முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பு வருமானத்தை அதிகரிக்கிறது. |
| 3 | முடுக்கி **(B) = I / C** | பெருக்கி **(K) = Y / I** |

**5.மிகைப் பெருக்கி விளக்குக.**

மிகைப்பெருக்கி எளிய பெருக்கியைவிட சிறந்ததாகும். ஏனெனில் எளிய பெருக்கி தன்னிச்சையான முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும். ஆனால் மிகைப்பெருக்கி தன்னீச்சையான முதலீடு மற்றும் தூண்டப்பெற்ற முதலீடு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்

**6.பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.**

பெருக்கியின் எடுகோளானது அதிகரித்த வருமானத்தின் ஒரு பகுதி நுகர்விற்காக செலவிடப்படுகின்றது என்பதே. ஆனால் நடைமுறையில் மக்கள் அதிகரித்த வருமானத்தை வேறு ஒரு பொருட்களின் மீது செலவு செய்வார்கள். இவ்வகை செலவுகளே குறைபாடுகள் எனப்படும் 1.பழைய கடன்களை திரும்ப செலுத்துதல் 2.செல்வத்தை வாங்குதல் 3.பண்டங்களையும் பணிகளையும் இறக்குமதி செய்தல் 4.நுகர்வு பொருட்கள் கிடைக்காமை 5. முழு வேலைவாய்ப்பு நிலை.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## பாடம் 5. பணவியல் பொருளியல்

**இரண்டு மதிப்பெண் வினாவிடை.**

**1.பணத்தின் இலக்கணம் தருக.**

பண்ட பரிமாற்றத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது பணம் இது இடைநிலைக் கருவியாகவும் பொதுமதிப்பளவையாகும் சேமிப்பு நிலைக்களனாகவும் செயல்படுகிறது. **வாக்கரின்** கூற்றுப்படி பணம் எதையெல்லலாம் செய்ய வல்லதோ அதுவே பணம் என்று கூறுகிறார்.

**2.பண்டமாற்று என்றால் என்ன?**

பிறரிடம் உள்ள தங்களுக்கு தேவையான பொருட்களை அல்லது பணிகளை பெறும் பொருட்டு தங்களிடம் உள்ள பொருட்களை அல்லது பணிகளை மாற்றாக வழங்குவது பண்டமாற்று முறையாகும்.

**3.பண்டப்பணம் என்றால் என்ன?**

பணத்தைப் போன்று பண்டத்தையோ பொருட்களையோ பரிமாற்ற உதவுவது பண்டப்பணம் ஆகும்

**4.பொன்திட்டம் என்றால் என்ன?**

பொன்திட்டத்தின் கீழ் ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது. ஒரு பண அலகின் வாங்குந்திறன் அப்பொன் பணத்தின் எடை அளவுக்கு சமமாக நிர்வகிக்கப்பட்டிருந்தது.

**5.நெகிழிப்பணம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.**

நெகிழிப்பணம் என்பது நடைமுறையில் உள்ள காகிதப் பணத்திற்கு மாற்றாகும். தினந்தோறும் பயன்படும் வகையில் நெகிழி அட்டையால் ( பிளாஷ்டிக் ) உருவாக்கப்பட்டிருப்பதால் இது நெகிழிப்பணம் என அழைக்கப்படுகிறது. எ.கா. கடன் அட்டை (கிரெடிட் கார்டு) பற்று அட்டை( டெபிட்கார்டு).

**6.பணவீக்கம் என்பது இலக்கணம் தருக.**

பணவீக்கம் என்பது தொடர்ச்சியான விலைமட்ட உயர்வைக் குறிக்கும் பணத்தின் மதிப்பு குறைந்து போதலைக் குறிக்கும் **இலக்கணம்:** "குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை" என கோல்பர்ன் வரையறுத்துள்ளார்.

**7.தேக்கவீக்கம் என்றால் என்ன?**

பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும் வேலை வாய்ப்பின்மையும் அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றினைந்த சூழ்நிலை ஆகும்.

**மூன்று மதிப்பெண் வினாவிடை**

**1.உலோகப்பணம் பற்றி ஒரு குறிப்பு தருக.**

1. உலோகத்ததிட்டத்தில் தங்கம் வெள்ளி போன்ற உலோகம் பணத்தின் திட்ட மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது. 2. உலோகத் திட்டத்தின் கீழ் உலோக நாணயங்கள் பணமாக உருவாக்கப்பட்டன. 3. இதில் முகமதிப்பு உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன

**2.பண அளிப்பு என்றால் என்ன?**

ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்த பண அளவே பண அளிப்பு ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பாகும். வட்டி விகிதம் விலைவாசி போன்றவற்றை நிர்ணயிப்பதில் பணஅளிப்பு முக்கியபங்காற்றுகின்றது.

**3.பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

**1.ரொக்க வைப்பு விகிதம் :** பொதுமக்கள் கையில் மற்றும் வங்கி வைப்புகளில் உள்ள பணம் ஆகும்

**2.ரொக்க இருப்பு வைப்பு விகிதம்:** வங்கி பாதுகாப்பு பெட்டகத்தில் இருக்கும் இருப்பு மற்றும் மையவங்கியில் வைத்திருக்கும் ரொக்க வைப்பு / மொத்த வைப்புகள்.

**3.ரொக்க இருப்பு விகிதம் :** வங்கியில் வைப்புகளில் குறைந்தபட்சமாக மைய வங்கியில் வைக்க வேண்டிய அளவு/ வங்கியில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புகள் என்ற விகிதம்.

**4.சட்டபூர்வ நீர்மை விகிதம் :** வணிக வங்கிகள் வைத்திருக்கும் நீர்மைத் தன்மையிலான சொத்துக்கள்/ வணிக வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பு மற்றும் கால வைப்புகள் என்ற விகிதம்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**4.பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.**

**பணவீக்கத்தின் வகைகள்**

| வேகத்தின் அடிப்படையில் | தேவை இழுப்பு பணவீக்கம் | தூண்டும் அடிப்படையில் |
|---|---|---|
| 1.தவழும் பணவீக்கம் | | 1.காகித பணவீக்கம் |
| 2.நடக்கும் பணவீக்கம் | | 2.கடன் பணவீக்கம் |
| 3.ஓடும் பணவீக்கம் | | 3.வரவு செலவு பற்றாக்குறை தூண்டல் |
| 4.தாவும் பணவீக்கம் | செலவு உந்து பணவீக்கம் | 4.இலாபத் தூண்டல் பணவீக்கம் |
| | | 5.பொருள் பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் |
| | | 6.வரித்தூண்டல் பணவீக்கம் |

**5.தேவை இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.**

**தேவை இழுப்பு பணவீக்கம் :** அளிப்பு நிலையாக உள்ள நிலையில் பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றது இது தேவை இழுப்பு பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.

**செலவு உந்து பணவீக்கம் :** உற்பத்தியில் மூலப்பொருட்கள் இதர இடுபொருட்கள் செலவு உயர்ந்து உற்பத்தி செலவு கூடி பொருட்களுக்கான விலை அதகரிக்கிறது இவை செலவு உந்து பணவீக்கம் எனப்படுகிறது.

**6.பணமதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.**

**1. மார்ஷலின் சமன்பாடு : M = KPY** **M** = பணத்தின் அளவு **Y** = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம் **P** = பொது விலை மட்டம் **K** = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்கும் ரொக்கப்பணம்

**2. கீன்ஸின் சமன்பாடு : n = PK (or) n/K** **n** = மொத்த பண அளிப்பு **P** = விலை **K** = மக்கள் கையில் உள்ள பணம்

**3. கீன்ஸின் விரிவான சமன்பாடு n = P (K+rK') my ; YJP = n / (k +rk')** **n** = மொத்த பண அளிப்பு **r** = வங்கிகளின் ரொக்க இருப்பு விகிதம் **K'** = வங்கி வைப்புகளாக சமுதாயம் வைத்திருக்கும் பணத்தின் அளவு நுகர்ச்சி பொருள்களின் எண்ணிக்கை

**7.மீள் பணவீக்கம் பற்றி விளக்குக.**

வேலைவாய்ப்புகளை பாதிக்காத வகையில் கடன் அளவுகளை குறைப்பதாகும். " மீள் பணவீக்கம் என்பது வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும் உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல்முறையே மீள்பணவீக்கம் "ஆகும்.

## பாடம் 6 வங்கியியல்

**இரண்டு மதிப்பெண் வினாவிடை**

**1.வணிக வங்கிகள் என்பதனை வரையறு,**

வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று பேரளவில் உற்பத்தி செய்வோர். பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு குறுகிய காலக்கடன் அளிக்கும். இவை நீண்ட கால கடனை அளிப்பதில்லை.

**2. கடன் உருவாக்கம் என்றால் என்ன ?**

வங்கிகளின் கடன் உருவாக்கம் மூலம் முன்னேற்றத்திட்டங்களுக்கு அதிக நிதியைப் பெற்றுத்தருகிறது. இதன்மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு,வருமானம், விற்பனை ஆகியன ஏற்றம் பெற்று பொருளாதார வளர்ச்சியை கொண்டு வருகின்றன.

**3. மைய வங்கி என்பதனை வரையறு.**

மைய வங்கி, ரிசர்வ் வங்கி அல்லது பணவியல் அதிகார அமைப்பு என்பது அரசின் பணம், பணமளிப்பு மற்றும் வட்டிவீதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யும் ஒரு நிறுவனம். மேலும் இது நாட்டிலுள்ள வணிகவங்கிகளை மேற்பார்வையிடும்.

**4. CRR மற்றும் SLR ஆகியவற்றை வேறுபடுத்துக.**

| | CRR(மாறும் ரொக்க இருப்பு விகிதம்) | SLR (சட்ட பூர்வ நீர்மை விகிதம்) |
|---|---|---|
| 1. | வணிக வங்கிகளிடம் வந்துசேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை மைய வங்கியில் இருப்பாக வைக்க வேண்டும். இதுவே ரொக்க இருப்பு விகிதம். | சட்டபூர்வ விகிதமான இதில் வங்கிகள் எப்பொழுதும் ரொக்கம்,தங்கம் மற்றும் ஒப்புதல் பெற்ற பத்திரங்கள் உள்ளடக்கிய நீர்மை தன்மை கொண்ட சொத்துக்கள் குறிப்பிட்ட சதவீதத்தில் தன்னகத்தே எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும் |

**5. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.**

மைய வங்கியானது பொது சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் அதனைத் திரும்பப்பெறுவதும் வெளிச்சந்தை நடவடிக்கை ஆகும். இதனால் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படும்.

**6. கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன ?**

1. வணிக வங்கிகள் வழங்கும் கடன்களை குறிக்கிறது.
2. கடன் நோக்கங்களை பட்டியலிட்டு வரையறை செய்வதன்மூலம் கடன் கட்டுப்பாட்டுகளை உருவாக்குவது ஆகும்.

**7.விவசாய கடன் வழங்கும் துறையின் பணிகளைக் குறிப்பிடுக.**

அ. நிபுணத்துவம் பெற்ற அலுவலர்களை நியமித்து விவசாய கடன் தொடர்பான வினாக்களை ஆய்வு செய்வது

ஆ. மைய அரசு, மாநில அரசு, மாநில கூட்டுறவு வங்கி மற்றும் இதர வங்கி நடவடிக்கைகளில் சிறப்பு ஆலோசனை வழங்குதல்

இ. ஊரக துறைக்கு விவசாயக் கடன் வழங்குவது

## மூன்று மதிப்பெண் வினாக்கள்:-

**1.வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக.**

1. வங்கிகடன் என்பது வாடிக்கையாளர்களின் வைப்புகளில் இருந்து தேவைப்படுவோருக்கு விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தத்தின்பெயரில் கடன் மற்றும் முன்பணம் கொடுப்பது.
2. முதன்மை வைப்புகள், ரொக்க கையிருப்பு விகிதத்தை விட அதிக பணமிருந்தால் அதனைக் கொண்டு வங்கிகள் கடன் வழங்குகின்றது.
3. எல்லா மக்களும் ஒரே நேரத்தில் பணமெடுக்க மாட்டார்கள். அதனால் குறைந்தபட்ச ரொக்க கையிருப்பு காலியாகிவிடாது.

**2. வங்கியல்லா நிதி அமைப்புகளைப்பற்றி சிறுகுறிப்பு தருக.**

1. ஒரு வங்கியல்லாத நிதி நிறுவனம் என்பது முழு வங்கிக்கான உரிமம் கொண்டது அல்ல. இது மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதும் அல்ல.
2. இவை வைப்புகளைப் பெற்று கடன் வழங்குகிறது.
3. வங்கிப்பணிகளைச் செய்யாமல் நிதி பரிமாற்றங்களை மட்டும் செய்கிறது.
4. வங்கியல்லாத நிதி நிறுவனம் பங்குசந்தை மற்றும் இதர நிதி நிறுவனம் என இருவகைப்படும்.

**3. கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கூறுக.**

1. கடன் கட்டுப்பாட்டு முறை என்பது மைய வங்கியின் பணவியல் மேலாண்மையின் முக்கிய நோக்கம்.

கடன் கட்டுப்பாட்டு முறைகள்

| **கடன் அளவு கட்டுப்பாட்டு முறைகள்** | **கடன் தன்மை கட்டுப்பாட்டு முறைகள்** |
|---|---|
| 1.வங்கி வீதக் கொள்கை | 1. கடன் பங்கீடு |
| 2.வெளிச்சந்தை நடவடிக்கை | 2. நேரடி நடவடிக்கைகள் |
| 3.மாறும் குறைந்தபட்ச வங்கி ரொக்க இருப்பு விகிதம் | 3. நெறிமுறைத் தூண்டல் |
| | 4. விளம்பரப்படுத்துதல் |
| | 5. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல் |
| | 6. விளிம்பு நிலைத் தேவை தொகையை மாற்றுதல் |

**4.நபார்டின் பணிகள் யாவை ?**

1. உற்பத்தி மற்றும் முதலீட்டிற்காக விவசாயம், சிறுதொழில்கள், குடிசை மற்றும் கிராமத்தொழில்கள், கைத்தொழில்கள், இதர ஊரகத் தொழில் நடவடிக்கைகளுக்கு மறு கடனை வழங்குகிறது.
2. மாநில கூட்டுறவு வங்கிகள் வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இதர நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகிய, மத்திய மற்றும் நீண்ட கால கடன்களை வழங்குகிறது.
3. கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும்பொருட்டு மாநில அரசுகளுக்கு இருபது ஆண்டு நீண்ட கால கடன்களை வழங்குகிறது.
4. மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் பத்திரங்களை பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்ட கால கடனை அளிக்கிறது.

www.Padasalai.Net

**5.இந்திய தொழில் நிதிக்கழகத்தின் பணிகளை குறிப்பிடுக.**

இது 1948ம் ஆண்டு ஜுலை 1ல் ஆரம்பிக்கப்பட்டது.

1. இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டுப்பணத்தில் நீண்ட கால கடன்களை வழங்குகிறது.
2. வெளியிடப்பட்ட சம உரிமைப்பங்குகள், முன்னுரிமை பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதி அளிக்கிறது.
3. சம உரிமைப்பங்குகள், முன்னுரிமைப்பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்குகிறது.
4. வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து வாங்கப்படும் கடன்களுக்கான உத்திரவாதத்தையும் அளிக்கிறது.

**6.பணச்சந்தையையும், மூலதனச்சந்தையையும் வேறுபடுத்துக.**

| | பணச்சந்தை | மூலதனச்சந்தை |
|---|---|---|
| 1. | குறுகிய கால நிதிக் கருவிகளை வாணிபம் செய்யும் | நீண்ட கால நிதிக் கருவிகளை வாணிபம் செய்யும் |
| 2. | முதிர்ச்சயடையும் நோக்கில், குறுகிய கால நிதியை பணச்சந்தையில் அளிக்கிறது. | உற்பத்தி நோக்கில் நிதியினைத் திரட்டும் இடமாக உள்ளது. |
| 3. | இந்திய ரிசர்வ வங்கி மேம்பாட்டு வங்கி வெளிநாட்டு வங்கி ஆகியவை அங்கம் வகிக்கிறது. | தனி முதலீட்டாளர்கள், நிதி நிறுவனங்கள், நிதி கழகங்கள்,வங்கிகள், அரசு பங்குச்சந்தைகள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்டவை உறுப்பினர்களாக உள்ளனர். |

**7.பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.**

1. கருப்புப் பணத்தினை ஒழிப்பது.
2. இலஞ்சத்தை தடுப்பது
3. தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது மற்றும்
4. கள்ளப்பணத்தினை தடுப்பது ஆகியன.

## பாடம் - 7- பன்னாட்டுப் பொருளியியல்

**இரண்டு மதிப்பெண் வினாவிடை**

**1.பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன ?**

பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும். (அல்லது) பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை படிப்பதற்கான பொருளியலின் பாடப்பிரிவாகும்.

**2.பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.**

பொருட்கள் மற்றும் பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக் கொள்வதை பன்னாட்டு வாணிகம் எனலாம்.

**3.பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக.**

1. திறனுடைய உற்பத்தி
2. நாடுகளிடையே விலை சமனடைதல்
3. பற்றாக்குறையுள்ள வளங்களை சமமாக பகிர்தல்

**4.பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும் டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன ?**

| | ஆடம்ஸ்மித் | ரிக்கார்டோ |
|---|---|---|
| 1. | முழுச் செலவுக்கோட்பாடு | ஒப்புமைச் செலவு கோட்பாடு |
| 2. | குறைந்த தனி அடக்கச் செலவில் பொருள் உற்பத்தி செய்யும் தேர்ச்சி | பொருட்களை உற்பத்தி செய்ய செலவழிக்கப்படும் செலவில் வேறுபாடு |

**5.வாணிப வீதத்தினை விளக்குக.**

ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்குமிடையேயான விகிதமே வாணிபவீதம் எனப்படும்.

**வாணிப வீதம் = ஏற்றுமதி விலைக்குறியீடு/ இறக்குமதி விலைக்குறியீடு x 100**

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**6.வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது ?**

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கை வாணிபச் செலுத்துநிலை ஆகும்.

**7.செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன ?**

ஒரு அலகு அயல் நாட்டு பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தை கொடுக்கிறோம் என்பதே செலாவணி மாற்று வீதமாகும்.

**மூன்று மதிப்பெண் வினா விடைகள்:-**

**1.பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக.**

1. **தூய வாணிபக்கோட்பாடு:** நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள், எந்த வகையான பொருட்கள், எந்தெந்த நாடுகளுக்கு, வாணிகம் செய்யப்படும் அளவு, அயல்வாணிப விகிதம் ஆகியவற்றை விவரிக்கும் பிரிவே தூய வாணிபக் கோட்பாடாகும்.

2.**கொள்கைச் சச்சரவுகள்:-** நாடுகளுக்கடையேயான வாணிக உறவுகளை கட்டுப்படுத்துவதா,தடைகளற்ற வாணிகத்தை அனுமதிப்பதா போன்றவற்றை இப்பிரிவு விவரிக்கிறது.

3. **பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்:** இப்பிரிவு பன்னாட்டு கூட்டமைப்பு, சுங்கவரி ஒன்றியங்கள், பணவியல் ஒன்றியங்கள், நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றை விவரிக்கிறது.

4. **பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குவடுத்தும் நிறுவனங்கள்:-**பன்னாட்டு பண நிதியம், மறுகட்டமைப்பு, பன்னாட்டு வங்கி,உலக வர்த்தக நிறுவனம் போன்ற பன்னாட்டு அமைப்புகள் நாடுகளுக்கிடையிலான உறவுகளை விவரிக்கிறது.

**2.பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுது.**

| | தொன்மைப் பன்னாட்டு வாணிபக்கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிபக்கோட்பாடு |
|---|---|---|
| 1. | உழைப்பு சார்ந்த மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாக கொண்டது | பொது மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. |
| 2. | இது ஒரு காரணி மாதிரியாகும்(உழைப்பு) | இது இரு காரணி மாதிரியாகும்(உழைப்பு,மூலதனம்) |
| 3. | ஒப்புமைச் செலவு கோட்பாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தி திறன் வேறுபாடுகள் காரணம் | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உற்பத்திக்காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடே காரணம் |

**3.மொத்த மற்றும் நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதத்தை சுருக்கமாக எழுதுக.**
**நிகர பண்டமாற்று வாணிப வீதம்:**

- இதை ப்.டபில்யு,தாசிக் 1927ல் வடிவமைத்தார், ஏற்றுமதி விலைகளுக்கும், இறக்குமதி விலைகளுக்கிடையிலான விகிதமே நிகர பண்டமாற்று வாணிப வீதம் என்கிறார்.
- பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளை அளவிட இந்த வீதம் பயன்படுகிறது.
  $Tn = (Px/Pm) \times 100$

**மொத்த பண்டாற்று வாணிப வீதம்:**

- இதையும் தாசிக் 1927ல் அறிமுகப்படுத்தினார். மொத்த ஏற்றுமதிப் பொருட்களின குறியீட்டெண்ணிற்கும், மொத்த இறக்குமதிப் பொருட்களின் குறியீட்டெண்ணிற்குமிடையேயான விகிதத்தை 100 ஆல் பெருக்க கிடைப்பது மொத்த பண்டமாற்று வாணிக வீதமாகும்.
- ஒரு குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்யும் நாடு எந்த அளவு பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளலாம் என்பதை சுட்டிக்காட்டுகிறது.
  $Tg = (Qm/Qx) \times 100$

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**4.வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குமிடையேயான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக.**

| வாணிபக்கொடுப்பல் நிலை | | அயல்நாட்டு செலுத்து நிலை |
|---|---|---|
| 1. | ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பைக் குறிக்கும் | பல நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை குறிக்கும். |
| 2. | பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்கள் மட்டும் அறிக்கப்படுகிறது. | பொருட்கள் மட்டுமல்லாமல், பணிகள் மூலதனம் பணம் போன்றவையும் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. |
| 3. | இதை புலப்படும் வாணிகம் என அழைக்கலாம். | இது இரட்டை கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கை. |

**5.இறக்குமதி பங்களவு என்றால் என்ன ?**

1.அயல்நாட்டு செலுத்து சமமின்மையை நீக்குவதற்கு இது வழி வகுக்கிறது

2.ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் ஒரு பொருளைக் குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட மதிப்பிற்குள் இறககுமதி செய்ய அனுமதிப்பதுஇறக்குமதி பங்களவாகும்.

3.இறக்குமதி பங்களவு நிர்ணயித்து இறக்குமதியை குறைக்கலாம்.

**6. மாறுகின்ற பணமாற்று வீதத்தின் பொருள் தருக.**

1.அந்நிய செலாவணி, சந்தை விசைகளாக தேவை மற்றும் அளிப்புகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

2. மாறுகின்ற அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பண மாற்றும் விதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பணமாற்று வீதமாகும்.

3. இதை மிதக்கும் பணமாற்று வீதம் என்றும் அழைக்கலாம்.

**7. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.**

1. விற்பனையை விரிவுடுத்துதல்
2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
3. வாணிக பரவலாக்கம்
4. போட்டி இடர்களை குறைத்தல்

**பாடம் -8 பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்**

**இரண்டு மதிப்பெண் வினா விடைகள்:-**

**1.சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.**

1. பன்னாட்டு பணநிதியத்தின் கையிருப்பாக உள்ள உறுப்பின் நாடுகளின் பணமே சிறப்பு எடுப்புரிமைகளாகும்.

2. இது தாள்தங்கம் என்று அழைக்கப்படும்.

3.IMF-ன் கட்டளைப் பணமாகும்.

4.உலக வைப்பு நாணயமாகும்.

**2.ஆசியானின் இரண்டு நோக்கங்களை குறிப்பிடுக.**

1. பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி, பண்பாட்டு மாற்றத்தை துரிதப்படுத்துகிறது.

2.ஐ.நா.சபையின் கொள்கைகளைக் கடைபிடித்து தென்கிழக்கசியப் பகுதியில் அமைதி மற்றும் உறுதியான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்துகிறது.

3.உறுப்பினர் நாடுகளை ஒன்றிணைத்து செயல்பட வைப்பது.

4. கல்வி,பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான வசதிகளை உறுப்பினர் நாடுகளில் அமைப்பது.

**3. ஐ பி ஆர் டி-யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களை சுட்டிக்காட்டுக.**

1. வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது.
2. கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது
3. ஈட்டுறுதி வழங்கி கடன் பெற்றுத் தருவது.

**4. பொது சந்தை ___ வரையறு.**

புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக் காரணிகள் இடம்பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பே பொதுச்சந்தை ஆகும்.

www.Padasalai.Net

**5.தடையற்ற வாணிகப்பகுதி என்றால் என்ன ?**
1. ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாக கருதி வாணிகத்தடைகளை குறைக்க ஒத்துழைக்கும்.
2.இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது.

**6.எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது ?**
நேபாள் தலைநகரம் காட்மண்டு இதன் தலைமைச் செயலகமாகக் கொண்டு ஜனவரி 16, 1987-ல் செயல்படத் துவங்கியது.

**7.உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக.**
1.பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு(IDA)
2.பன்னாட்டு நிதிக்கழகம்(IFC)
3.பன்முக முதலீட்டு ஒப்புறுதி முகமை(MIGA)
4.முதலீட்டு பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பன்னாட்டு மையம்(ஐஊளுஐனு)

**மூன்று மதிப்பெண் வினாவிடை**

**1.பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்களைக் குறிப்பிடுக.**
1.சில நாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிற நாட்டுப் பொருளாதாரத்துடன் இணைந்து புதிய வாணிக வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன.
2. தடையற்ற வாணிகப் பகுதி: உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாக கருதி வாணிகத்தடைகளைக் குறைக்க ஒத்துழைக்கும்.
3.சுங்கவரி ஒன்றியம்: உறுப்பினர் நாடுகளுக்கு வரி விதிக்காமலும், பிற நாடுகளுக்கு வரி விதித்தும் ”சுங்கவரி ஒன்றியம்” ஏற்படுத்துகின்றது.
4.பொதுச்சந்தை: தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக்காரணிகள் இடம்பெயர்வுக்காக பொதுச்சந்தையை ஏற்படுத்துகிறது.
5. பொருளாதார ஒன்றியம்: பொதுச்சந்தைகளையும்,சுங்கவரி ஒன்றியத்தையும் இணைத்து பொருளாதார ஒன்றியம் அமைக்கிறது.

**2.வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன ?**
1. சில நாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிறநாட்டுப் பொருளாதாரத்துடன் தங்கடைய பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன.
2.சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத்தொகுதிகள் பரஸ்பர நல்லிணக்கத்திற்கு உதவுகிறது.
3.தடையற்ற வாணிகப் பகுதி, சுங்கத்தீர்வை ஒன்றியம், பொதுச்சந்தை மற்றும் பொருளாதார ஒன்றியம் ஆகிய வடிவங்களில் பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்கிறது.

**3.ஐ எம் எப்-ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.**
1. **அடிப்படைக்கடன் வசதி:** ஒரு உறுப்பினர் நாடு நிதியத்தில் உள்ள அதன் மூலதனப்பங்கில் 25 விழுக்காடு அளவு நிபந்தனையற்ற கடன் பெறுவதையே அடிப்படைக்கடன் என்கிறோம்.
2. **விரிவாக்கப்பட்ட நிதி வசதி:** உறுப்பு நாடுகள் தங்களின் மூலதனப்பங்கில் 140 விழுக்காடு அளவு அடிப்படைக்கடன் தொகைக்கு மேல் கடன் பெற அனுமதிப்பது விரிவாக்கப்பட்ட கடன் திட்டமாகும்.
3.**ஈடுசெய் நிதி வசதி:** நிதியம் 1963-ல் துவக்கியது.குறைவான ஏற்றுமதி வருவாய் ஈட்டும்நாடுகளுக்கான தனிப்பட்ட கடன் திட்டமே ஈடுசெய் கடன் திட்டமாகும்.
4.**தாங்கிருப்பு வசதி:** 1969-ல் துவக்கியது. உணவுத்தானியங்கள் விளைவிக்கும் நாடுகள் தானிய சேமிப்பு கிடங்குகள் அமைத்து உணவுப் பொருள் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வழங்கப்படும் கடனாகும்.

**4.பல தரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன ?**
1.தடையற்ற வர்த்தக பகுதியில் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பல நாடுகளுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தம்.
2.பன்னாட்டு வாணிகத்தில் ஒரே குழுவாக ஒன்றிணைந்து செயல்படும் நாடுகளின் கூட்டமைப்பு பலதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு செயல்படுவார்கள்.

**5.பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.**

1.பிரேசில்,ரஷ்யா,இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய ஐந்து வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சமூகப் பெயர் பிரிக்ஸ் ஆகும்.

2இந்த நாடுகள் 2009லிருந்து உச்சி மாநாடுகளை நடத்தி வருகின்றன.

3.பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜீலை 2018ல் நடைபெற்றது.

4. இதில் உள்ளடக்கிய வளர்ச்சி,வாணிகப் பிரச்சனைகள், உலகளாவிய அரசு நிர்வாகம்,பகரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் நிகழ்ச்சி நிரலாகும்.

**6.சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.**

1.தெற்கு ஆசிய நாடுகளின் பொருளதார ஒத்துழைப்புக்காக துவக்கப்பட்ட அமைப்பாகும்.

2.டிசம்பர் 8,1985ல் அமைக்கப்பட்டது

சார்க் அமைப்பின் பணிகள்:

1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்
2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்
3.உறுப்பினர் நாடுகளுக்கிடையே உறவை மேம்படுத்துதல்
4.வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது
5.பயங்கரவாத செயல்களை தடுப்பது.

**7.ஆசியான் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக.**

1. ஆசியான் உறுப்பினர் நாடுகளுக்கிடையே தடையற்ற பொருள்,பணிகள், மூலதன போக்குவரத்து உருவாக்கியது.
2.உறுப்பு நாடுகளின் வணிகப் போராட்டத்திறனை மேம்படுத்துவது மற்றும் பொருளாதார மேம்பாட்டு இடைவெளியை குறைப்பது.
3. வாணிக தடைகளற்ற அனுமதி வழங்குவது
4. உறுப்பு நாடுகளுக்கு சந்தை மற்றும் முதலீடு வாய்ப்புகளை வழங்குவது
5.தொழில் மற்றும் வணிகம் உள்ளிட்ட பல துறைகளில் ஒத்துழைப்பை வளர்த்தல்.

## பாடம் -9 நிதிப் பொருளியல்

**இரண்டு மதிப்பெண் வினா விடைகள்**

**1.”பொது நிதி” வரையறு**

1. பொது நிதி அரசு நிதி பற்றிய செயல்பாட்டோடு தொடர்புடையது.
2.பொது நிதி என்பது அரசின் வருவாய் மற்றும் செலவுகள் பற்றியது.
3. பொதுமக்களின் மொத்த விருப்பங்களை கருத்தில் கொண்டு செயல்படுகிறது.

**2.”பொது வருவாய்” என்றால் என்ன ?**

1.பொது வருவாய் என்பது அரசின் வருவாய் ஆகும்.

2. அரசு பெரும் வரி மற்றும் வரியல்லாத வருமானங்கள் இதில் அடங்கும்.

3. மேலும் வரிக்கொள்கை, வரிவிகிதம்,வரியின்பளு மற்றும் வரியின் தாக்கம், விளைவு பற்றியும் விளக்குகிறது.

**3.”வரி”, ”கட்டணம்” வேறுபடுத்து**

| | வரி | கட்டணம் |
|---|---|---|
| 1. | குடி மக்கள் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயமாக செலுத்தக்கூடியதாகும். | பொது நிர்வாகத்தில் செய்யும் சேவைக்காக கட்டணம் விதிக்கப்படுகிறது. இது வரியைப் போல் கட்டாயம் இல்லை. |
| 2. | எ.கா. வருமான வரி, சுங்கவரி | எ.கா. ஓட்டுநர் உரிமம் வழங்க விதிக்கப்படுகிறது. |

**4.”பூஜ்ய அடிப்படை வரவு செலவுத்திட்டம் ” குறிப்பு வரைக.**

1.இதில் ஒவ்வொரு செலவினமும் புதிய செலவாக கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடு செய்யப்படும்.

2. புதிய இனமாக கருதப்பட்டு அரசு பட்ஜெட்டில் புதிய செலவு மதிப்பீட்டை கொண்டுள்ளது.

3. சமூகத்தின்முந்தய முன்னுரிமைகள் பொருளாதார பார்வையில் மறு ஆய்வு செய்யப்படும்.

**5. நேர்முக வரிக்கு இரு உதாரணங்கள் தருக.**
1. வருமான வரி 2.சுங்க வரி 3. சொத்து வரி

**6. GSTயின் கூறுகள் யாவை ?**
1.CGST —– மாநிலத்திறகு உட்பட்ட விற்பனையில் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி
2.SGST- மாநில சரக்கு மற்றும் சேவை வரி
3.IGST-மாநிலங்களுக்கிடையேயான விற்பனையில் ஒருங்கிணைந்த வரி, மத்திய அரசால் வசூலிக்கப்படுவது.

**7."பொதுக்கடன்" என்பதன் பொருள் யாது ?**
1.அரசு தன் பாரம்பரிய வருவாயுடன் தனிநபர் மற்றும் உள்நாட்டு,வெளிநாட்டு நிறுவனங்களிடம் கடன் வாங்குவது.
2. வளர்ச்சி குன்றிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்திற்கான கடன் பெறுதல்
3. நடப்பு நிதி பற்றாக்குறையை சரி செய்ய திரட்டப்படும் நிதி ஆகும்.

**மூன்று மதிப்பெண் வினா விடைகள்**

**1.வரி விதிப்பு விதிகளை விவரிக்க**

1.**செலுத்தும் திறன் பற்றிய விதி:** மக்களின் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்ப அரசு வரி விதிக்க வேண்டும்.
2.**நிச்சயத்தன்மை விதி:** வரிவீதம் மற்றும் செலுத்தும் காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை இல்லாமல் அரசு விதிக்க வெண்டும்.
3.**வசதி விதி:** வரி வசூலிக்கும் முறை மற்றும் வரி செலுத்தும் காலம் மக்களின் வசதிக்கு ஏற்ப அமைய வேண்டும்.
4. **சிக்கன விதி:** வரி வசூலிக்கும் செலவுகள் குறைவாக உள்ளவாறு அரசு வரி விதிக்க வேண்டும்.

**2.தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக.**

1. **பகுத்தறியும் தன்மை :** குறைந்த செலவில் அதிக நலம் பெறும் பகுத்தறிவை கொண்டவை.
2. **கடனுக்கான வரையறை:** தங்களுக்கு வரும் வருவாய்க்கு அப்பால் கடன்கள் பெறுவதில் வரையறை கொண்டு உள்ளது.
3. **வளப்பயன்பாடு:** உத்தம அளவிலும் வரையறைக்கு உட்பட்டும் வளங்களைப் பயன்படுத்துகின்றன.
4. **நிர்வாகம்:** செயல்திறன் மற்றும் ஊழல் அற்ற தன்மை பொறுத்து நிர்வாகம் மேற்கொள்ளப்படுகிறது.

**3.நவீன அரசின் பணிகள் யாவை ?**
**இராணுவம்:** அரசு போதுமான அளவில் காவல் மற்றும் இராணுவ நிலைகளை பராமரிக்கிறது.
**நீதித்துறை:** அனைத்து வகுப்பினரும் சமநீதி பெறும் வகையில் நீதி அமைப்பு ஏற்படுத்துகிறது.
**நிறுவனங்கள்:** அரசு நிறுவனங்கள் செயல்பாடு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஒழுங்கு முறை மற்றும் கட்டுப்பாடுகள் மூலமும்அரசு செயல்படுகிறது.
**கட்டமைப்பு:** சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பை உருவாக்கி முன்னேற்ற அடிதளம் அமைக்கிறது. சமூக நீதித்தன்மையோடு செயல்படுகிறது.
**பேரின பொருளாதார கொள்கை:** பேரின பொருளாதார கொள்கையை அடைய முற்படுகிறது.

**4.வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.**

1. வரி என்பது அரசிற்கு கட்டாயம் செலுத்த வேண்டிய ஓர் தொகை
2. வரியை மறுக்க முடியாது.
3. பிரதிபலன் எதிர்பாராமல் செலுத்த வேண்டிய தொகை
4. வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.
5. வரி என்பது சட்டத்தை மீறியதற்கான தண்டத் தொகை அல்ல.

www.Padasalai.Net

**5.நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.**

| ஒப்பீடு | | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|---|
| 1. | பொருள் | நேரடியாக விதிப்பது | பண்டம் மற்றும் பணி மீது விதிப்பது |
| 2. | இயல்பு | வளர்வீதம் | தேய்வீதம் |
| 3. | தாக்கம் | ஒருவரையே சாரும் | பல்வேறு நபர் மீது விழும் |
| 4. | வரி அடிப்படை | செலுத்துபவரின் வருமானம்/செல்வம் | பண்டம்/பணி வாங்கும்போதும் விற்கும்போதும் உற்பத்தியின் போது |
| 5. | வரி ஏய்ப்பு | உண்டு | இல்லை |
| 6. | பண வீக்கம் | குறைக்கிறது | ஏற்படுத்துகிறது |
| 7. | சுமை | மற்றவர் மீது மாற்ற முடியாது. | மற்றவர் மீது மாற்ற முடியும் |

**6.முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன ?**

1. முதன்மை பற்றாக்குறை என்பது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்துதலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும்.

2.அரசின் உண்மைச் சுமையை காட்டும்.

3.முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்துவதற்கான தேவையை குறிக்கும்.

முதன்மைப் பற்றாக்குறை(PD) = நிதிப்பற்றாக்குளை(FD) - வட்டி செலுத்துதல்(IP)

**7.பொதுக்கடனை திரும்ப செலுத்துவதற்கான மூன்று முறைகளைக் கூறுக.**

**மூழ்கும் நிதி:** தனியொரு நிதியை ஏற்படுத்தி அதன்மூலம் கடனை திரும்ப செலுத்தும் தன்மை

**கடனை மாற்றுதல்:**கடன் மாற்றல் மூலம் பழைய கடனை புதிய கடனாக மாற்று பளுவை குறைக்கிறது.

**வரவு-செலவுத்திட்ட வரி:** வரவு - செலவுத் திட்ட உபரியை கடனை செலுத்தப் பயன்படுத்துகிறது.

**பகுதியாக செலுத்துதல்:**வருடாந்திர தவணைகள் மூலம் செலுத்தப்படுகிறது.

**கடன் மறுப்பு:**கடனை செலுத்த மறுக்கும் தன்மை,இதனால் அரசின் நாணயத்தன்மை பாதிக்கும்.

**வட்டி வீதத்தை குறைத்தல்:** வட்டியை குறைத்து கடன் செலுத்தும் தன்மை.

**மூலதனத்தீர்வை:** தனிநபர் மற்றும் நிறுவனங்களின் மூலதன சொத்தின்மீது வரிவிதித்து அதன் மூலம் கடனை திரும்பச் செலுத்துதல்.

## பாடம்-10-சுற்றுச்சூழல் பொருளியல்

**இரண்டு மதிப்பெண் வினா விடைகள்**

**1.சுற்றுச்சூழல் என்பதன் பொருள் தருக**

1. சுற்றுச்சூழல் என்பது நம்மை சுற்றியுள்ள காற்று,நீர்,நிலம், இயற்கை வளங்கள்,வனங்கள, தாவரங்கள் மற்றும் அனைத்து உயிரினங்கள் அடங்கும் தொகுப்பு.அத்தொகுப்பில் உள்ளவைகளுக்கிடையேயான பரஸ்பர உறவும் ஆகும்.
2. சுற்றுச்சூழல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள தொடர்புகளை பற்றியது ஆகும்.
3. சுற்றுச்சூழல் என்பது உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளை உள்ளடக்கியது ஆகும்.

**2.சூழலியல் என்றால் என்ன?**

"உயிரினங்களுக்கிடையேயான பரஸ்பர உறவும்,அவைகளின் சுற்றுச்சூழலையும் பற்றி படிக்கும் இயல் ஆகும்".

**3.தலா(per capita) கரியமில வாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை ?**

1.கனடா 2.அமெரிக்க ஐக்கிய நாடுகள் 3.தென் கொரியா 4. சவுதி அரேபியா 5.ஆஸ்திரேலியா

**4. சுற்றுச்சூழல் பொருட்கள் என்றால் என்ன ? உதாரணம் கூறு.**

"தனியார் சொத்துரிமை இல்லாத,பொதுவாக அனைவராலும் பயன்படுத்தும் பொருட்களையே சுற்றுச்சூழல் பொருட்கள் என்கிறோம்.

எ.கா.தூய்மையான காற்று, பசுமையான போக்குவரத்து, உள்கட்டமைப்பு,ஆறுகள், மலைகள்,பசுமை,வழிகள்,கடற்கரை,பொது பூங்காக்கள்.

www.Padasalai.Net

**5.ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.**

1. ஒலித்தடைகளை ஏற்படுத்துதல்
2. போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு
3.வேலை செய்யும் இடத்தில் ஒலித்தடுப்பாணை நிறுவுதல்
4.ஒலி பெருக்கிகளை கட்டுப்படுத்துதல்
5.கனரக வாகனம் செல்லும் நேரத்தைக் கட்டுப்படுத்துதல்
6.தரை போக்குவரத்திற்கு புதிய சாலைகள் அமைத்தல்

**6.உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு:**

1.நிலம் மற்றும் நீர் உள்ளடக்கிய பூமி மற்றும் வளிமண்டலத்தில் தற்போது அதிகரிக்கும் வெப்பநிலையே ”புவி வெப்பமயமாதல்” என்கிறோம்.
2.கரியமிலவாயு, மீத்தேன்,குளோரோ புளோரோ கார்பன், நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற பசுமைகுடில் வாயுக்களின் அளவு வளி மண்டலத்தில் அதிகரிப்பதால் புவியின் வெப்பம் அதிகரிக்கின்றது.
3.புவி வெப்பமடைதல் காரணமாக விவசாயம்,தோட்டக்கலை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு போன்றவை அதிக அளவில் பாதிக்கப்படுகிறது.

**7.விதைப்பந்து என்பதன் பொருள் தருக.**

1. ஓர் விதை மண்ணால் மூடிவைக்கப்படுகிறது. அந்த மண் உரம் கலந்த களிமண் ஆகும். பிறகு அது உலர்த்தப்பட்டு பின்பு எங்கு வேண்டுமோ அங்கு விதைக்கப்படுகிறது.
2.இது களிமண்ணோடு சேர்த்து பந்துபோல் உருட்டப்படுவதால் இதை ”விதைப்பந்து” என்பர்.(Seed Ball)
3.மரங்கள் நடுவதற்று விதைப்பந்து முறை எளிதான நீடித்து நிலைக்கும் வழி ஆகும்.

**மூன்று மதிப்பெண் வினா விடைகள்**

**1.பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு.**

1.சமூக அரசியல், அறிவியல்,தத்துவ மற்றும் பொருளதார அமைப்பு முறைகள் மனித வாழ்விணைனை தீர்மானிக்கிறது.
2.மனிதன் தனது வாழ்வாதாரதிற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரினங்களுடனும்,உயிரற்ற பொருட்களுடனும் இணைந்து உள்ளதால் அவனது வாழ்க்கையை சுற்றுச்சூழலே பெருமளவு தீர்மானிக்கிறது.
3.சுற்றுச்சூழல் பொருளியலின் முக்கிய குறிக்கோள் இயற்கை வளங்களை மிகச்சிறந்த முறையில் பங்கீடு செய்வதற்கான கருவிகளை மற்றும் கொள்கைகளை கண்டு அந்த வளங்களை நோக்க சந்தையினை திரும்ப வைப்பது ஆகும்.

**2.பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக**

இயற்பியலின் பொருள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான வெப்ப இயக்கவியல் முதல் விதியை ஆதாரமாக கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான தொடர்வை விளக்குவதுதான் ”பொருள்சார் சமநிலை அணுகுமுறை” எனப்படும்.

$$M = G - Rc - Rp + Rp^{r} + Rc^{r} = R^{d}_{C} + R_{C}^{d}$$

**3.பல்வகையான காற்று மாசுகளை விளக்குக.**

”சுற்றுச்சூழல் சொத்து,தாவரங்கள் உயிரிகள் மற்றும் மனித இனம் ஆகியவற்றிற்கு ஊறுவிளைவிக்கும் அளவிற்கு காற்று மண்டலத்தில் திட,திரவ,வாயு பொருட்கள் கலந்திருப்பதையே ”காற்று மாசுபடுதல்” என்கிறோம்.

காற்று மாசுபடுதலின் வகைகள்:

1. உட்புற காற்று மாசு:
2.வெளிப்புற காற்று மாசு

மனிதர்கள் வசிப்பிடத்தில் தோன்றும் காற்று மாசுபாடு உட்புற காற்று மாசு எனப்படும்
காற்று மண்டலத்தில் மாசு கலந்திருப்பதையே வெளிப்புற காற்று மாசு என்கிறோம்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**4.நீர்மாசுக்கான காரணங்கள் யாவை ?**

"உயிரினங்களுக்கு ஆபத்தான உயிரினங்களின் உடல் நலனைக் கெடுக்கின்ற பொருட்களையோ, சக்திகளையோ மனிதன் நேரடியாகவோ,மறைமுகமாகவோ நீர் நிலைகளுக்குள் செலுத்துதல் "நீர் மாசுபடுதல்" ஆகும்.
காரணங்கள்:
1.கழிவு நீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம்
2.திடக்கழிவுகளை கொட்டுதல்
3.ஆலைக்கழிவுகளை கொட்டுதல்
4.எண்ணெய் சிந்துதல்
5.அமில் மழை
6.புவி வெப்பமடைதல்
7.நீர்நிலைகளில் பிராணவாயு குறைதல்

**5.இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக.**
இ-கழிவுகள் என்பவை மின்னணு கழிவுகள் ஆகும்.
மின்னணு கழிவுகள் என்பவை பயன்படுத்த இயலாத எல்லா மின்னணு சாதனங்கள் என்று பொருள்படும் எ.கா. கணினிகள்,தொலைகாட்சி பெட்டிகள்,கைபேசிகள் மற்றும் மின்னஞ்சல் கருவிகள்

**6.நில மாசு என்றால் என்ன ? அதற்கான காரணங்களை குறிப்பிடுக.**
1. சுற்றுச்சூழலில் கொட்டப்படும் பல திட,திரவ,வாயுப்பொருட்கள் நிலத்தின் தன்மை கெடுதல் "நிலமாசு" எனப்படும்.
2.கழிவுகளை கொட்டுவதால் நிலத்தின் தரம் குறைவடையும்.
காரணங்கள்:
1.காடுகளை அழித்தல்
2.சுரங்கத் தொழில்கள்
3.தொழிற்மயமாதல்
4.அணுமின் விரயங்கள்
5.விவசாய நடவடிக்கைகள்
6.மண்ணில் புதைத்தல்
7.கட்டுமானப்பணிகள்

**7.குறிப்பு வரைக:**
**அ) பருவநிலை மாற்றம் ஆ) அமில மழை**
அ)பருவநிலை மாற்றம்:- வளிமண்டலத்தில் பசுமைக்குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்து கொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளே "கால நிலை மாற்றம்" எனப்படும்.

ஆ)அமில மழை: தொழிற்சாலைகள்,வாகனங்கள்,கொதிப்பான்கள் போன்றவை வெளியிடும் வாயுக்கள் வளிமண்டலத்தில் உள்ள நீர்துகள்களோடு இணையும் போது ஏற்படும் மாற்றமே "அமில மழை" எனப்படும்.

**பாடம்-11-பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்**
**இரண்டு மதிப்பெண் வினா விடைகள்:**
**1.பொருளாதார முன்னேற்றம் -வரையறு:**

பொருளாதார முன்னேற்றம் என்பது அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை ஒரு குறிப்பிட்ட நோக்கம் மற்றும் தேவையை அடைய பயன்படுத்தும் வழிமுறையைக் குறிக்கும். (அல்லது) நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் நல்ல மாற்றங்களை பொருளாதார முன்னேற்றம் எனப்படும்.

**2.பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக.**

1. நாட்டின் மொத்த உற்பத்தி 2.தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி 3.நலன் 4.சமூகக் குறியீடுகள்

**3.பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக.**

| | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| 1. | வளர்ந்த நாடுகளின் பொருளாதார பிரச்சனைகளை கையாளுகிறது | வளரும் நாடுகளின் பிரச்சனைகளை கையாளுகிறது. |
| 2. | மாற்றங்கள் படிப்படியாகவும் நிதானமாகவும் நிகழ்கிறது. | தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழ்கிறது. |

**4.மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன ?**

ஒரு நாட்டின் எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்புடன் வெளிநாட்டு வருமானத்தின் மொத்த மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி எனலாம்.

**5.பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.**

பொருளாதார திட்டமிடல் என்பது தனியார் உற்பத்தி மற்றும விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதை குறிப்பதாகும் -ராபின்ஸ்.

**6.பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடு**க.

மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத்தேவையை நிவர்த்தி செய்வதே சமூக குறியீடுகள் என அழைக்கப்படுகிறது.நேரடியாக வழங்கும் அடிப்படைத் தேவைகளான சுகாதாரம்,கல்வி,உணவு,குடிநீர் போன்றவை சமூக குறியீடுகளாகும்.

**7.நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.**

National Institition for Transforming India என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும். இது திட்டக் குழுவிற்கு பதிலாக ஜனவரி 1,2015 அன்று உருவாக்கப்பட்டது. இந்தியப் பிரதமரே நிதி ஆயோக்கின் தலைவர்.

**மூன்று மதிப்பெண் வினா விடைகள்:**

**1.வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக.**

| **வறுமையின் நச்சு சுழற்சி** |
|---|
| ***குறைவான உண்மை வருமானம் *குறைந்த அளவிலான சேமிப்பு* குறைவான அளவிலான தேவை**<br><br>***குறைவான உற்பத்தித் திறன் * குறைவான அளவிலான முதலீடு உடல் மற்றும் மனித மூலதனம்** |

"ஒரு நாடு ஏழை ஏனென்றால் அது ஏழைகளின் நாடு". வறுமையின் நச்சு சூழல் அளிப்பு மற்றும் தேவை இரு பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.

1. அளிப்பின் பக்கத்திலிருந்து பார்த்தால் குறைவான சேமிப்பு காரணமாக முதலீடு குறைகிறது. இதன் காரணமாக மூலதன பற்றாக்குறை ஏற்படுகிறது.
2. தேவைப் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும்.

**2.பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை ?**

**பொருளாதாரம் சாராத காரணிகள் என்பவை:**

1. மனித வளம்
2. தொழில்நுட்ப அறிவு
3. அரசியல் சுதந்திரம்
4. சமூக அமைப்பு
5. ஊழலற்ற நிர்வாகம்
6. முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம்
7. நீதி போதனை,அறநெறி மற்றும் சமூக விழுமியங்கள்
8. சூதாட்ட முதலாளித்துவம்
9. பரம்பரை சொத்துரிமை முதலாளித்துவம்

**3.வறுமையின் நச்சு சுழற்சியை எப்படித் தடுப்பது ?**

1. தேவைப்பக்கத்தில் வறுமையின் நச்சு சுழற்சியை உடைத்தெரிய, நர்க்ஸ் சரிசம வளர்ச்சி உத்தியை பரிந்துரை செய்கிறார்.
2. அளிப்புப் பக்கத்தில் இச்சுழற்சியை உடைத்தெறிய ஒரு நாடு கடந்த கால சராசரி சேமிப்பு விகிதத்தை விட இறுதிநிலை சேமிப்பு அளவை அதிகமாக இருக்குமாறு செய்ய வேண்டும்.
3. ஒரே நேரத்தில் பலவகைத் தொழில்களில் ஒரு நாடு முதலீடு செய்தால் தொழிலாளர்களுக்கு அந்தத் தொழில்களில் வேலை கிடைக்கும்.அவர்கள் மற்றத்தொழில்களில் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நுகர்வோர்களாக மாறுகிறார்கள்.

**4.இந்தியாவில் பொருளாதாரத்திட்டமிடல் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுக**

இந்தியாவில் திட்டமிடுதலின் பரிணாம வளர்ச்சி

1. உயர்திரு எம்.விஸ்வேஸ்வரய்யா(1934): இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தவர் இவரே ஆவார். அவர் தனது ஆலோசனையாக பத்தாண்டுத் திட்டமொன்றை அவர் எழுதிய ”இந்திய பொருளாதார திட்டமிடல்” என்ற புத்தகத்தில் விளக்கியுள்ளார்.
2. ஜவஹர்லால் நேரு(1938): இவர் ”தேசியத்திட்டக்குழு” ஒன்றை அமைத்தார்.
3. பாம்பே திட்டம்(1940):மும்பையின் முன்னனி தொழிலதிபர்கள் பாம்பே திட்டம் என்ற திட்டத்தை 1938ல் முன்மொழிந்தனர். இது பதினைந்து ஆண்டுகளுக்கான தொழில் முதலீட்டுத் திட்டமாகும்.
4. எஸ்.என்.அகர்வால்(1944): இவர் ”காந்தியத் திட்டத்தை”வழங்கினார்.
5. எம்.என்.ராய்(1945): மக்கள் திட்டத்தை வடிவமைத்தார்.
6. ஜெயப்பிரகாஷ் நாராயணன்(1950): இவர் ”சர்வோதயத் திட்டம்”ஒன்றை முன்மொழிந்தார். மேற்கண்ட திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடுதலை நேரு அவர்கள் 1950ல் திட்டக்குழுவை ஏற்படுத்தினார்கள்.
7. 

**5.திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை விவரி:**

கீழ்க்கண்ட வகைகளில் திட்டமிடல் வலியுறுத்தப்படுகிறது.

1. நாட்டின் சந்தைகளின் இயக்கத்தை முடுக்கிவிடுதலும் உறுதியாக்குதலும்
2. வேலையின்மையை அகற்றுதல்
3. சமமான முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்
4. திட்டமிடல் வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்கும்
5. ஆர்தர் லூயிஜ், ”பின்தங்கிய நாடுகளில் தேசிய வருவாயை உயர்த்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் மிகவும் அவசியம். இதற்கு திட்டமிடல் என்பது வழிகளையும், வழிமுறைகளையும் கொண்ட ஒரு சாதனமாக திகழ்கிறது” என்கிறார்.

**6.செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக்குமிடையேயான வேறுபாடுகள் எழுதுக.**

1.**செயல்பாட்டு திட்டமிடல்:** ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல் செயல்பாட்டுத் திட்டமிடலாகும்.

2.**அமைப்பு முறை திட்டமிடல்:** பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமிடலாகும். இவ்வகையான திட்டமிடல் பெரும்பாலும் பின்தங்கிய நாடுகளில் இது காணப்படுகிறது.

**7.நிதி ஆயோக்கின் பணிகள் யாவை ?**

1. கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி
2. நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்
3. பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்
4. தொலைநோக்கு மற்றும் காட்சி திட்டமிடல்
5. நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்
6. உகந்ததாக்குதல்
7. சச்சரவுத் தீர்த்தல்
8. வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்
9. உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்
10. திறன் உருவாக்குதல்
11. கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

## பாடம்-12 ——புள்ளியியல் முறைகள்மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம்

**இரண்டு மதிப்பெண் வினாவிடைகள்:**

**1.புள்ளியியல் என்றால் என்ன ?**

புள்ளியியல் என்பது எண்ணிலான விவரங்களைத் திரட்டி, ஒருங்கிணைத்து வழங்கி, பகுத்தாய்ந்து விவரிப்பது ஆகும்.

**2.புள்ளியியலின் வகைகள் யாவை?**

1.விவரிப்பு புள்ளியியல்
2.உய்த்துணர்வு புள்ளியியல்

**3.உய்த்துணர்வு புள்ளியியல் என்றால் என்ன?**

கூறு(Sample)வின் விவரங்களை பகுப்பாய்வு செய்து அதன் பண்பினை அறிந்து கொள்வதன் மூலம் முழுத்தொகுப்பின் விவரங்களுக்கான பண்புகளை உய்த்துணவர்வதற்குப் பயன்படும் புள்ளியியலின் ஒரு பகுதி உய்த்துணர்வு புள்ளியியல் எனப்படுகிறது.

**4.புள்ளிவிவர வகைகள் யாவை?**

இயல்பின் அடிப்படையில் புள்ளி விபரங்கள்

1.அளவு விவரங்கள்
2.தன்மை விவரங்கள் என இரு வகைப்படும்

ஆதாரத்தின் அடிப்படையில் புள்ளி விபரங்கள்

1.முதல்நிலை விவரங்கள்
2.இரண்டாம் நிலை விவரங்கள் என இரு வகைப்படும்.

**5.உடன் தொடர்பு என்பதனை வரையறு:**

உடன் தொடர்புப் பகுப்பாய்வு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகின்றன என்பதைப் பற்றி கணக்கிடுவது.

**6.ஒட்டுறவு என்பதனை வரையறு.**

ஒரு மாறியின் மதிப்பில் மாற்றம், மற்ற மாறியின் மதிப்பில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே ஒட்டுறவு ஆகும்.(அல்லது) ஒட்டுறவு என்பது இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்குகிறது.

**7.பொருளாதார அளவையியல் என்றால் என்ன ?**

1. தெய்ல் அவர்களின் கூற்றுப்படி "பொருளாதார அளவையியல் என்பது பொருளாதார விதிகளுக்கு எண் விவரங்களை அளிப்பதாகும்.
2. பொருளாதாரம் + புள்ளியியல் +கணிதம் +எண் வடிவ புள்ளி விவரங்கள்=பொருளாதார அளவையியல்.

**மூன்று மதிப்பெண் வினா விடைகள்:-**

**1.புள்ளியியலின் பணிகள் யாவை ?**

1. புள்ளியியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.
2. இது பரந்த விவரங்களை சுருக்கித் தருகிறது.
3. இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
4. இது எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது
5. இது மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
6. கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.

**2.பல்வகையான உடன் தொடர்புகளை கூறி விளக்குக.**

1.மாறிகளுக்கு இடையேயான உறவின் திசையின் அடிப்படையில்:-
  1.நேர்மறை உடன்தொடர்பு
  2. எதிர்மறை உடன்தொடர்பு
2.பகுப்பாய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் மாறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்
  1. எளிய உடன் தொடர்பு
  2. பன்முக உடன் தொடர்பு
  3. பகுதி உடன்தொடர்பு
3.மாறிகள் மாறும் விகிதத்தின் அடிப்படையில் வகைப்பாடு:-
  1.நேர்கோட்டு உடன்தொடர்பு
  2.வளைகோட்டு உடன்தொடர்பு

www.Padasalai.Net

**3.ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்களைகூறுக.**

1 இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்க ஒட்டுறவுப் பகுப்பாய்வு பயன்படுகிறது.
2.இரு மாறிகளுக்கிடையே காரண விளைவை ஆராய்ந்து அவைகளுக்கு இடையே சார்புத் தொடர்பை ஏற்படுத்த பயன்படுகிறது.
3.தனித்த மாறியின் குறிப்பிட்ட மதிப்பிற்கு சார்பு மாறியின் மதிப்பு எவ்வளவு என்பதை ஊகம் செய்ய உதவுகின்றது.
4.நேர்கோடு அல்லாத தொடர்புகளையும் ஆய்வு செய்ய பயன்படுகிறது.

**4.பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக.**

1.பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல் மூலமாக அறிந்து விளக்குவதற்கு உதவுகின்றது.
2.இவைகள் மாறிகளுக்கு இடையேயுள்ள கடந்த காலத்திலுள்ள பழைய மற்றும் நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிரூபிப்பதற்கும் உதவுகின்றது.
3. புதிய கோட்பாடுகளையும், புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகின்றது.
4. எடுகோள்களை சோதனை செய்யவும், முழுத் தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.

**5.பொருளாதார மாதிரியிலிருந்து பொருளாதார அளவையியல் மாதிரியினை வேறுபடுத்துக.**

1.கணித பொருளியலின் மாதிரிகள் பொருளாதார கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. ஆனால் பொருளாதார அளவையியல் மாதிரிகள் கோட்பாடுகளின் நம்பகத்தன்மையை அறிய புள்ளிவிபரங்களின் அடிப்படையில் சோதனை செய்யப்படுகிறது.
2.புள்ளியியலில் இருக்கும் ஒட்டுறவு மாதிரியில் பிழைக்கருத்து இல்லை. ஆனால் பொருளாதார அளவையியல் மாதிரியில் பிழைக்கருத்து உள்ளடக்கியிருக்கிறது.

**6.இந்தியாவில் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தை விவாதி**

1. புள்ளியியல் ஆதார அமைப்புகள் நாடு முழுவதிலும் நடைபெறும் புள்ளி விவர சேமிப்புகளை ஒருங்கிணைத்து அவற்றை பரிசோதித்து,தர மேம்பாட்டினை உறுதி செய்கிறது.
2. இவை தேசிய கணக்குகளை ஒருங்கிணைப்பது,ஆண்டு தொழில் துறை விசாரணையை நடத்துவது,பொருளாதார விசாரணைகளை நடத்துவது,தொழில்சாலை உற்பத்தி விவரங்களை சேகரிப்பது,நுகர்வோர் குறியீட்டெண்ணை அமைப்பது ஆகும்.
3.மேலும் இவை மற்ற சமுதாய புள்ளி விவரங்களை சேகரிப்பதற்கு,பயிற்சி,பன்னாட்டு ஒத்துழைப்பை பேணுதல்,தொழில் பிரிவுகளை நிர்ணயித்தல் ஆகியவற்றிற்கு உதவி செய்கிறது.

www.Padasalai.Net